<u>முதன்மை மாவட்ட நீதிமன்றம், கடலூர் மாவட்டம், கடலூர்.</u>

OS. 272/2023

2025 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 28 ஆம் நாள் .வா.த.சா1-ன் வாக்குமூலம்

இந்திய உறுதிமொழிச்சட்டம் (44/1969)-ன் விதிமுறைகளின்படி முதன்மை மாவட்ட நீதிபதி திருமதி. .ஜி.சுபத்திரா தேவி, எம்.எல்., அவர்களால் சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | துரைரங்கம் | வயது | : | |
| தந்தை/கணவர் பெயர் | : | நடேசன் | தொழில் | : | |
| கிராமம் | : | | ஜாதி | : | |
| தாலுக்கா | : | | சமயம் | : | |
| மாவட்டம் | : | | | : | |

**1 முதல் 8 பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1 முதல் 3 பிரதிவாதிகள் என்னுடைய மூத்த சகோதரர்கள். த.வா பி இண சொத்தில் 4 ல் ஒரு பாகம் கூறியுள்ளேன் என்றால் ஆமாம். எங்கள் குடும்பத்தில் 16.12.1976 தேதியிட்ட விடுதலை பத்திரம் மூலம் Ex.A1 சிலம்பிநாதன் பேட்டை கிராமத்தில் 20 ஏக்கர் நிலம் கிடைத்தது என்றால் ஆமாம். இது தவிர பூர்விக சொத்தாக சிலம்பிநாதன் பேட்டையில் 7 ½ ஏக்கர் சொத்து உள்ளது என்றால் ஆமாம். நடுவீரப்பட்டு கிராமத்தில் 1.73 செண்ட் நிலம் உள்ளது என்றால் ஆமாம். அது இல்லாமல் 605 சதுரமீட்டர் மனைக்கட்டு இருந்தது என்றால் ஆமாம். வெள்ளக்கரை கிராமத்தில் 1 ஏக்கர் 20 செண்ட் நிலமும், புலியூர் எல்லையில் 2 ஏக்கர் நிலமும் பூர்விக சொத்தாக இருந்தது என்றால் ஆமாம். எனது தந்தை நடேசன் 1989 ஜனவரியில் இறந்துபோனார். எனது தயார் ருக்குமணி 1998 ஜனவரியில் இறந்துபோனார். 40 வருடத்திற்கு முன்பே பாகம் ஏற்பட்டது என்றால் இல்லை, அப்பா இறந்தபிறகு வாய்மொழியாக பாகம் ஏற்பட்டது. எழுத்து மூலமாகவும் இல்லை,

சமபாகமாகவும் இல்லை. வாய்மொழி பாகம் 1990 ஏற்பட்டது. வெள்ளைங்கரை கிராமத்தில் 1 ஏக்கர் 20 செண்ட் நிலத்தை ராசு படையாட்சி மகன் ராஜேந்திரனுக்கு கிரையம் கொடுத்தேன் என்றால் ஆமாம். அந்த 1 ஏக்கர் 20 செண்ட் வீட்டிலிருந்து 4 கீ.மீ தொலைவில் முந்திரிகாடு சுழற்ச்சி முறையில் ஆளுக்கு ஒருவருடம் பார்த்துக்கொண்டு வந்தோம். அந்த முந்திரிக்காட்டில் பக்கத்து ஊரை சேர்ந்தவர் கொலை நடந்துவிட்டது. அதனால் என் அண்ணன்கள் அங்கு செல்வதற்கு அவர்களுக்கு பயமாக இருக்கிறது என்றும், என்னை அவர்களுக்கு பணம் கொடுத்துவிட்டு நானே அந்த முந்திரிக்காட்டை வைத்துக்கொள்ள சொல்லிவிட்டார்கள். நான் பெரிய அண்ணனுக்கும், இரண்டாவது அண்ணனுக்கும் பணமாக கொடுத்துவிட்டேன். மூன்றாவது அண்ணனுக்கு பக்கத்திலிருந்த 2 செண்டை நிலத்தை போதும் எனக்கு பணம் வேண்டாம் என்று சொன்னதால் அவருக்கு அந்த 2 செண்டை கொடுத்துவிட்டேன். என் வீட்டு பெண்கள் கொலை நடந்ததால் முந்திரிக்காட்டிற்கு போய் வேலை செய்ய பயந்ததால், என் பிள்ளைகளின் படிப்பு செலவிற்காக 2001 ல் விற்றுவிட்டேன். அது பாகத்தில் வராது. ஏனென்றால் மூன்று அண்ணனுக்கு அதற்கு ஈடாக பணம் கொடுத்துவிட்டேன். என்னிடம் காட்டப்படுவது நான் ராஜேந்திரனுக்கு கிரையம் கொடுத்த பத்திரம் தான் அது பி.த.சா.ஆ 1. அதில் என் பூர்விக பாத்தியமாகியும் எங்கள் குடும்பத்தில் செய்துகொண்ட வாய்மொழி பாக பாத்திமாயும் என் பாகத்திற்கு கிடைத்து இதனால் வரையில் நான் தனிமையில் ஆண்டு அனுபவித்து வருவதும் எனக்கு சொந்தமானதுமான இந்த சொத்தை ரூ-48000 கிரையம் கொடுக்கிறேன் என்று வாசகம் கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். நான் சொல்லக்கூடிய என் சகோதரர்களுக்கு பணம் கொடுத்ததற்கான எந்த ஆதாரமும் இல்லை என்றால் ஆமாம். என்னுடைய பிராதில் மேற்கண்ட எனது சொத்து இருந்ததை அது விற்பனை செய்யப்பட்டததையோ நான் சொல்லிய மேற்கண்ட காரணங்களை

கூறவில்லை என்று சொன்னால் சரிதான். பிரதிவாதிகள் ஆட்சேபனையில் சொல்லியுள்ள விவரங்களை தெரிந்து கொண்டு தற்போது வழக்கிற்காக பொய் சொல்கிறன் என்றால் சரியல்ல. 14.09.1994 ல் நானும், 3 ம் பிரதிவாதி சக்கரபாணி என்பவரும் சேர்ந்து புலியூர் கிராமத்தில் 2 ஏக்கர் நிலத்தை தமிழ்ச்செல்வி என்பவருக்கு கிரையம் கொடுத்தேனா என்றால் ஆமாம். என்னிடம் காட்டப்படும் அந்த பத்திரம் என்றால் ஆமாம். அது பி.த.சா.ஆ.2. அதில் விற்ற பணத்தை கொண்டு எங்கள் நிலத்திற்கு அருகிலே நிலம் வாங்கியிருக்கிறோம். இதற்கு முன்பு சிவாஞானம் விற்றுள்ளார். புலியூரில் உள்ள 2 ஏக்கர் எனக்கும், 3 ம் பிரதிவாதிக்கும் வாய்மொழியாக ஒதுக்கப்பட்டது என்பதால் விற்றோம். 07.07.2010 நான் 2 ம் பிரதிவாதி சிவஞானமிடமிருந்து சர்வே எண்.190 ல் 86 செண்ட் கிரையம் வாங்கியுள்ளேன் என்றால் ஆமாம். சர்வே 190/2 ல் 5 ஏக்கர் கிரையம் வாங்கியுள்ளேன் என்றால் ஆமாம். 07.12.2009 சிவஞானம் சர்வே எண்.206/4 ஏ 1 ஏக்கர் நிலத்தை சக்திமுருகனுக்கு கிரையம் கொடுத்தார் என்றால் ஆமாம். இந்த சொத்தை பின்னிட்டு 01.02.2018 7 ம் பிரதிவாதி, 8 ம் பிரதிவாதி மலர்கொடிக்கு கிரையம் கொடுத்தார் என்றால் ஆமாம். 29.05.2019 சிவஞானம், 3 ம் பிரதிவாதி சக்கரபாணிக்கு சர்வே எண்.206/4A1- 1 ஏக்கர் நிலத்தை கிரையம் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். வழக்கு பி ஷெட்யூல் 19 முதல் 22 அயிட்டங்கள் வீடு மனை என்றால் ஆமாம். நான் குடியிருக்கும் வீட்டின் சர்வே எண் ஞாபகமில்லை. 4 பேர்களுக்கும் தனித்தனியாக வீடு உள்ளது என்றால் ஆமாம். நான் குடியிருக்கும் வீடு என் அப்பா கட்டியது. 3 ம் பிரதிவாதி சக்கரபாணி குடியிருக்கும் வீடு அப்பா கட்டியது. குப்புசாமி மற்றும் சிவஞானம் ஆகியோர் இருக்கும் வீடு அவர்கள் பிள்ளைகள் கட்டியது. பெரியவர் வீடு வழக்கு போடுவதற்கு 2,3 வருடத்திற்கு முன்பு அவர் பிள்ளைகள் கட்டினர். சிவஞானத்தின் வீடு வழக்கு போடுவதற்கு 5 வருடத்திற்கு முன்பு அவரது பிள்ளைகள் கட்டினர். பழைய வீடு இடிக்கும்போதோ, கட்டும்போது நான் எந்த

ஆட்சேபனையும் செய்யவில்லை என்றால் சரி. நானும் என் சகோதரரும் கிரையம் கொடுத்த சொத்து, வழக்கில் சொல்லவில்லை என்றால் சரிதான். நானும், 3 ம் பிரதிவாதியும் சேர்ந்து குமளம்குளம் கிராமத்தில் 6 செண்ட் மனையை ராமார் படையாட்சியிடமிருந்து 11.12.1985 ல் கிரையம் பெற்றோம் என்றால் சரிதான். இந்த 6 செண்ட் மனை 3 ம் பிரதிவாதி சக்ரபாணி வசம் உள்ளது. கிரையத்திற்கு பின்பு சக்கராபாணி வசம் போனாது 2004 அல்லது 2005 இருக்கும். அதற்கு கீழ்புறம் உள்ள 6 செண்டும் என் வசம் உள்ளது மேல்புற 6 செண்ட் சக்கரபாணிக்கு ஒதுக்கப்பட்டது என்றால் அப்படி இல்லை. கீழ்புறம் உள்ள 6 செண்ட் என் அப்பா பூர்விக ம். அதற்கு மேல்புறம் 6 செண்ட் என் சித்தப்பா இடம். அதை நானும், சக்ரபாணியும் கிரையம் வாங்கினோம் ஆளுக்கு 3 செண்ட். ஒன்றாகத்தான் 6 செண்டையும் கிரையம் வாங்கினோம். அதற்கு மேல்புறம் தான் பூர்விகம் தான் 10 செண்ட் உள்ளது. அந்த 10 செண்ட் பூர்விக இடத்தை சிவஞானமும், குப்புசாமியும் எடுத்துக்கொண்டதால் நாங்கள் கிரையம் வாங்கிய சொத்து 6 செண்ட் சக்ரபாணிக்கும், அதற்கு கீழ்புறம் உள்ள 6 செண்ட் எனக்கும் ஒதுக்கப்பட்டது என்றால் பாகப்பிரிக்காமல் அனுபவித்து வருகின்றோம். தனிதனியாக வீடு கட்டினோமோ என்றால் இல்லை. பெரியண்ணன் மட்டும் வசதிகேற்ப கூரை வீடு இடித்துவிட்டு, மாடி வீடு கட்டியுள்ளார். சிவஞானம் நாட்டு ஓட்டு வீடு கட்டியுள்ளார். என் வீடும், சக்கரபாணி வீடு நாட்டு ஓட்டு வீடு ஆகும். என் குடும்பத்தில் பாகம் ஆகிவிட்டது என்பதும் வழக்கிற்காக பாகம் பிரிக்கவில்லை என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் அனுபவித்து வரும் சொத்தில் ரோடு புறமாக எனக்கு எதுவும் ஒதுக்கவில்லை என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். 29.11.2001 வெள்ளக்கரை கிராமத்தில் 1 ஏக்கர் 20 செண்ட் நில சொத்தை ராஜகுமாரான் மற்றும் ராஜேந்திரன் ஆகியோருக்கு கிரையம் கொடுத்தேன் என்றால் சரிதான். நான் கிரையம் கொடுத்த சொத்தில் சக்குபந்தில் ரோட்டுக்கு கிழக்கு என்று சொல்லப்பட்டுள்ளது என்றால்

ஆமாம். அது நான் என் அண்ணனுக்கு காசு கொடுத்து கிரையம் வாங்கிய சொத்து. அதற்கு ஆவணம் இல்லை. அந்த ரோடு குமளம் குளம் -புலியூருக்கு செல்லும் சாலை என்றால் ஆமாம். ஆகையால் ரோடு பக்கம் எனக்கு இடம் கொடுக்கவில்லை என்பதும் சரியல்ல என்றால் சரியல்ல. எனக்கும், என் சகோதரர்களுக்கும் ஏற்கனவே பாகப்பிரிவினை ஆகிவிட்டது என்றால் சரியல்ல. வெறும் அனுபவம் தான் என்று சொன்னால் அந்த சொத்தை நான் கிரையம் வாங்கவேண்டிய அவசியமில்லை என்றால் சரியல்ல. என் மூத்த சகோதரர் குப்புசாமி 5 வது அயிட்ட சொத்தில் 20hp Motor போட்டிருந்தார் என்றால் அதன் மின்னினைப்பு எண்.244 என்று சொன்னால் அது என் அண்ணனுக்கு தான் தெரியும், எனக்கு தெரியாது. 1999 லிருந்து இந்த மோட்டார் ஷெட் உள்ளது என்றால் ஆமாம். இந்த இடத்திற்கு உண்டான ரசீது குப்புசாமி தான் செலுத்திவருகிறார் என்றால் எனக்கு தெரியவில்லை. நான் செலுத்தவில்லை. 1977 ம் வருடமே பாகம் ஆகிவிட்டது என்றால் சரியல்ல. அப்பா இறந்தபிறகு தான் பாகம் பிரிக்கப்பட்டது. பாகம்பிரிக்கப்பட்ட சொத்துக்களுக்கு மீண்டும் நான் பாகம் கேட்பது சட்டத்திற்கு புறம்பானது என்றால் சரியல்ல.

மறு விசாரணை -இல்லை.